கருநாடக அரசு

# செம்மொழித் தமிழ்

# *CHEMMOZHI THAMIZH*

## முதல் மொழி

பாகம் - 2

**FIRST LANGUAGE TAMIL**

# 4

ஆம் வகுப்பு

**STANDARD**

பயிற்சியுடன் கூடிய பாடப்புத்தகம்

**Text cum Workbook**

**Karnataka Text Book Society (R.)**
6th Cross, Malleshwaram
Bangalore - 560 003.

@KTBS NOT TO BE REPUBLISHED

Z3W1U5


| எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 13. | சுற்றுப்புறப் பாதுகாப்பு (பாடல்) | 1 |
| 14. | நான்கு கோடி (நாடகம்) | 5 |
| 15. | தீராத விளையாட்டுப்பிள்ளை கண்ணன் (பாடல்) | 15 |
| 16. | மகாத்மா காந்தி (பாடல்) | 21 |
| 17. | கடல் (உரையாடல்) | 26 |
| 18. | சேவல் கூவுது (பாடல்) | 33 |
| 19. | பள்ளி ஆண்டு விழா (பாடல்) | 39 |
| 20. | விறகு வெட்டியும் வன தேவதையும் | 43 |
| 21. | வன விலங்குகளைக் காப்போம் | 54 |
| 22. | நல்வழி | 64 |
| 23. | குடியரசுத் தலைவரான நல்லாசிரியர் | 66 |
| 24. | திருக்குறள் | 74 |


NOT TO BE REPUBLISHED @KTBS

## *13. சுற்றுப்புறப் பாதுகாப்பு*

X8B2N9



தேங்கி இருக்கிற தெருவோரத் தண்ணீரால்
தீமைகள் வந்து சேரும்.
தாங்கிடும் மனிதரே ! சற்று நீர் சிந்தித்துத்
தண்ணீரைப் பாதுகாப்பீர் !

காற்றிலே புகைதூசு கலப்பதைச் சுவாசிக்கக்
காசநோய் வந்து சேருமே !
புரிந்ததைத் தடுப்பதால் பூமியில் மனிதர்க்குப்
புதுவாழ்வு மலராகும் !

வீட்டிலும் வெளியிலும் தூய்மையைக் காப்பதால்
வெளியேறும் நோய்கள் யாவும்!
கடமையாய்த் தூய்மையைக் காப்பதால்
கணக்கிலா இன்பம் சேர்க்கும்.

NOT TO BE REPUBLISHED ©KTBS

பந்தமாய்க் கழிவுகள் பக்கத்தில் இருப்பதால்
பலவித நோயுண்டாக்கும்.
பள்ளத்தைத் தோண்டியே இவைகளை இடுவது
பண்பாட்டை வளர்த்துக்காட்டும்.

சிந்தனைக் குள்ளிதை சீராகவைத்திடின்
சிறப்பாக வாழவைக்கும்.
வந்தனைக் குரியதாம் சுத்தத்தை வாழ்க்கையில்
மணப்பவர்க்கு இனிமை சேர்க்கும்.

- இரா. இராதா கிருட்டிணன்
கவியரங்கக் கவிதைகள்

NOT TO BE REPUBLISHED @KTBS

**அருஞ்சொற்பொருள் :**

சிந்தித்து = நினைத்து ; சுவாசித்தல் = மூச்சுவிடுதல்.

தூய்மை = சுத்தம் ; கணக்கிலா = எண்ணிக்கையற்ற

இடுவது = போடுவது ; பந்தம் = தொடர்பு

சீராக = நேர்த்தியாக ; வைத்திடின் = வைத்திருந்தால்.

வந்தனைக்குரியதாகும் ; வணக்கத்திற்குரியதாகும்.

## I. வினாக்களுக்கு விடையளி :

1. தேங்கியுள்ள நீரால் உண்டாகும் தீமைகள் யாவை ?
2. சுற்றுச் சூழல் அசுத்தமாகும் வேறுபல சூழ்நிலைகளைக் கூறுக.
3. கழிவுகளை எப்படி அப்புறப் படுத்த வேண்டும் ?

4. வீட்டிலும் வெளியிலும் தூய்மையைக் காப்பதால் என்ன பயன் ?

5. காற்று மாசடையும் வேறு பல சூழல்களைக் கூறுக.

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. காற்றில் புகை, தூசு கலப்பதைச் சுவாசித்தால் ............. வரும்.

2. சுத்தத்தை வாழ்க்கையில் இணைப்பவர்க்கு ............... சேர்க்கும்.

3. வீட்டிலும், வெளியிலும் தூய்மையைக் காப்பதால் .................. வெளியேறும்.

4. கழிவுகள் பக்கத்தில் இருந்தால் பலவித .............. உண்டாக்கும்.

## III. கீழ்க்காணும் சொற்களுக்கு ஏற்ற எதுகைச் சொற்களை எழுதுக :

(எ.டு) வீட்டிலும் - நாட்டிலும்.

1. பந்தம் -

2. பள்ளம் -

3. கடமை -

4. சிறப்பு -

@KTBS NOT TO BE REPUBLISHED

**IV. ஒரு சொல்லுக்குப்பல பொருள் எழுதுக :**

(எ.டு) படி → படிப்பது
→ அளப்பது
→ படிக்கட்டு

திங்கள் → ....................
→ ....................
→ ....................

மணி → ....................
→ ....................
→ ....................

**V. கீழ்க்காணும் சொற்களுக்குச் சரியான எதிர்ச்சொற்களைப் பகுதியிலிருந்து எடுத்தெழுது :**

நன்மை x .................

அசுத்தம் x ...............

மேடு x ................

துன்பம் x ...................

**VI. பிரித்தெழுதுக :**

தெருவோரம் ..................

பண்பாடு .................

புது வாழ்வு ....................

நோயுண்டாக்கும் ..................

© KTBS NOT TO BE REPUBLISHED

# 14. நான்கு கோடி
# (நாடகம்)

W3Y6I8



| | | |
|---|---|---|
| இடம் | : | சோழ மன்னனின் அரசவை, அவையோர், மந்திரிகள், புலவர்கள், குடிமக்கள், |

*அரசன்* : வாழ்க சோழவளநாடு ! வளர்க தமிழ் ! என்னுடைய மனதில் நீண்ட நாட்களாக ஓர் ஆசை. அதை அரசவை புலவர்களாகிய நீங்கள் தீர்த்து வைக்க வேண்டும்.

*புலவர்- 1* : மாதம் மும்மாரி பொழிவது தவறினாலும் மாதம் முழுவதும் மாரியாக விளங்கும் அரசர்க்கு அரசே! உங்கள் ஆசையை நிறை வேற்றுவது எங்களது தலையாய கடமை.

*அரசன்* : நன்றி புலவர்களே ! நன்றி. நீங்கள் நாளை காலைக்குள் நான்கு கோடிப் பாடல்களை சபையில் பாடிக்காட்ட வேண்டும் அதுவே என் ஆசை.

© KTBS NOT TO BE REPUBLISHED

(புலவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பயத்துடனும், குழப்பத்துடனும் பார்த்துக் கொள்கின்றனர்)

அரசன் : புலவர்களே ! இன்று போய் நாளை பாடலுடன் வாருங்கள்.

## காட்சி 2

(புலவர்கள் சோர்ந்த முகத்துடன் வந்து கொண்டிருப்பதை எதிரில் வந்த ஔவையார் கண்டார் அவர்களைப் பார்த்துப் பேசத் தொடங்கினார்.)

ஔவையார் : புலவர்களே ! நீவீர் வாழ்க ! உங்களது முகங்களில் மலர்ச்சி இல்லையே ! சோழ மன்னனின் ஆட்சியில் புலவர்களின் முகங்களில் சோகமா ? காரணம் யாது ? உரைப்பீர் ! சோழநாட்டில் புலவர்கள் சோர்ந்திருப்பதோ ? கூடாதே !



புலவர் : வாழும் தமிழே ! எங்களுடைய தமிழ்த் தாயே ! உங்களை வணங்குகிறோம்.

NOT TO BE REPUBLISHED @KTBS

புலவர் 2 : எங்கள் அரசர் பெருமான் நாளை காலைக்குள் நான்கு கோடிப்பாடல்கள் பாடவேண்டும் என ஆணையிட்டுள்ளார்.

புலவர் 3 : எல்லோரும் சேர்ந்து இரவெல்லாம் கண் விழித்துப் பாடினாலும் நான்கு கோடிப் பாடல்களைப் பாட முடியுமா ?

புலவர் 4 : அரசருடைய ஆணையை மீற முடியுமா ?

புலவர் 5 : அனைவரும் சேர்ந்து இரவெல்லாம் பாடினாலும் சில ஆயிரம் பாடல்கள் தானே பாட முடியும்.

புலவர் 6 : புலமை இருக்கிறது ! ஆனால் பொழுது இருக்க வேண்டுமே ! ஒன்றா, இரண்டா நான்கு கோடிப் பாடல்கள்.

ஔவையார் : அஞ்சாதீர்கள், எனது அன்பு நெஞ்சங்களே நான்கு கோடிப் பாடல்களை நான் பாடித் தருகிறேன்.

புலவர் 1 : நீங்கள் ஒருவர் மட்டும் நான்கு கோடிப் பாடல்களை நாளை காலைக்குள் எப்படிப் பாடி முடிக்க முடியும் ?

ஔவையார் : நீங்கள் அச்சப்படவும் வேண்டாம் சஞ்சலப்படவும் வேண்டாம். நாளை காலைவரை என்ன? .... இன்றே இப்போதே இங்கேயே பாடுகிறேன் எழுதிக் கொள்ளுங்கள்.

©KTBS NOT TO BE REPUBLISHED

கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடை நாக்கோடாமை கோடி பெறும்.

ஒருகால் சென்று மதியாதார் முற்றம் மதித்து மிதியாமை கோடி பெறும்.

உண்ணீர் உண்ணீர் என்று ஊட்டாதார் மனையில் உண்ணாமை கோடி பெறும்.

கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு கூடுவது கோடி பெறும்.

புலவர்கள் : ஓ ! இது எங்களுக்கு விளங்காமல் போயிற்றே!

ஔவையார் : புலவர்களே ! இதைக் கொண்டுபோய் அரசன் முன் பாடுங்கள்.

புலவர்கள் : அம்மையே கோடிபெறும், கோடி பெறும் என்று நான்கே குறள் வடிவப்பாக்களில் பாடியதை அரசன் ஏற்றுக் கொள்வானோ ?

ஔவையார் : கவலைப்பட வேண்டாம், புலவர்களே! வெற்றி உங்களுடையது! சென்று வாருங்கள்.

***காட்சி 3***

இடம் : அரசவை

(அரசன், புலவர்கள், அமைச்சர் மற்றும் மக்கள். முதலானோர்)

வாயிற் காவலன் : வாழ்க ! அரசே ! வளர்க சோழ நாடு.

(வாயிற் காவலன் அரசனைப் பணிந்து)

தங்களைக் காணப் புலவர் பெருமக்கள் வந்துள்ளனர்.

© KTBS NOT TO BE REPUBLISHED



அரசன் : உள்ளே வரச் சொல்.

(புலவர்கள் அரசவைக்குள் வந்து ஔவையாரின் நான்கு கோடிப் பாடலைப் பாடினர்)

அரசன் : நன்று ! புலவர்களே! இது, நீங்கள் பாடிய பாடலாகத் தோன்றவில்லையே பாடியது யார் ? மிக நன்றாக உள்ளது.

புலவர்கள் : நாங்கள் செய்வதறியாது விழித்துக் கொண்டிருக்கையில் ஔவையார்தான் எங்களுக்காக இப்பாடலைப் பாடினார்.

அரசன் : ஓ ! ஔவையாரா ! என்ன ஆச்சரியம்! நான் உடனே பார்க்க வேண்டும். வாருங்கள், அவரை அழைத்து வருவோம். நான் அப்பொழுதே நினைத்தேன் இத்தகைய கருத்துடைய பாடலை ஒரே இரவில் அவரால் தான் பாட முடியும்.

NOT TO BE REPUBLISHED ©KTBS

## காட்சி 4

அரசன் : (சிரம் தாழ்த்தி) தமிழ்த் தாயே ! வணங்குகிறேன் தங்களை இச்சோழ நாடு வரவேற்கிறது.

ஔவையார் : நல்லது மன்னா, உன் நாடு தழைக்கட்டும் ! தமிழ் வளரட்டும் !

(அரசன் ஔவையாருக்கு பொன்னும் பொருளும் வாரி வழங்கி மகிழ்ந்தான்)

புலவர்கள் : எம் பெருமையைக் காத்த ஔவைப்பிராட்டியே நீடூழி காலம் வாழ்வீராக ! நீங்கள் புலவர்களுக் கெல்லாம் புலவர்.

@KTBS NOT TO BE REPUBLISHED

### I. அருஞ்சொற் பொருள் :

1. மும்மாரி = மாதத்தில் மூன்று முறை மழை பொழியும்
2. முகமலர்ச்சி = மகிழ்ச்சியினால் முகம் மலர்போல் மலர்தல்
3. உரைப்பீர் = சொல்வீர்
4. அஞ்சா தீர்கள் = பயப்படாதீர்கள்
5. சூன்யமல்ல = வெற்றிடமல்ல
6. காக்க = காப்பாற்ற
7. நெஞ்சங்களே = இதயங்களே
8. சஞ்சலம் = மனக்கலக்கம்
9. உண்ணீர் = உணவு சாப்பிடுங்கள்
10. ஒருகால் = ஒரு வேளை
11. குடிப்பிறந்தார் = நல்ல குடியில் பிறந்தார்

12. விளங்காமல் = புரியாமல்.

13. பக்தி = தெய்வப்பற்று

## II. ஒலி நயச் சொற்கள் :

1. மதியாதார்

2. மிதியாமை

## III. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. எனது மனதில் ............... நாட்களாக ஒரு ஆசை.

2. உங்களது ............. மலர்ச்சி இல்லையே.

3. நாளை காலைக்குள் ............... கோடி பாடல்களைப்பாட வேண்டும்.

4. புலவர் .............. சோகமா !

5. ஔவையாருக்கு ................. வாரிவழங்கி மகிழ்ந்தான்.

## IV. பிரித்தெழுதுக :

1. மதியாதார் = ...............................

2. சோர்ந்திருப்பதோ = ...............................

3. இரவெல்லாம் = ...............................

4. சூன்யமல்ல = ...............................

5. சோழமன்னன் = ...............................

@KTBS NOT TO BE REPUBLISHED

## V. சேர்த்தெழுதுக :

1. குடி + பிறந்தார் = .........................
2. தன் + உடைய = .........................
3. கோடி + பெறும் = .........................
4. வாயில் + காவலன் = .........................
5. எங்கு + இருக்கிறார் = .........................

## VI. வினாக்களுக்கு விடை தருக :

1. சோழ அரசனின் ஆசை யாது ?

பதில் : ..........................................................................

..........................................................................

2. புலவர்கள் சோகமடையக் காரணம் யாது ?

பதில் : ..........................................................................

..........................................................................

3. ஔவையார் புலவர்களிடம் யாது கூறினார் ?

பதில் : ..........................................................................

..........................................................................

4. ஔவையார் பாடிய நான்கு கோடிப் பாடல்களை எழுதுக.

பதில் : ..........................................................................

..........................................................................

5. அரசர் ஔவையாருக்கு வழங்கியது யாது ?

பதில் : ..........................................................................

..........................................................................

NOT TO BE REPUBLISHED @KTBS

**VII. உனக்குத் தெரிந்த புல்வர்களின் பெயர்களை எழுதுக:**

*1.* ......கம்பர்......

*2.* .......................

*3.* .......................

*4.* .......................

*5.* .......................

***VIII. அடைப்புகளில் உள்ள எழுத்துக்களைக் கட்டத்தில் அடித்துவிட்டு மறைந்துள்ள பறவை அல்லது விலங்கின் பெயரை கண்டுபிடி :***

*(ப. ய. வ. ர)*

| | | | |
|---|---|---|---|
| ~~ர~~ | ~~ய~~ | ~~ர~~ | ல் |
| ~~ய~~ | ம | ~~வ~~ | ~~ர~~ |
| ~~ர~~ | ~~ய~~ | ~~ப~~ | ~~வ~~ |
| ~~வ~~ | ~~ர~~ | யி | ~~ப~~ |

(எ.க) மயில்

*(த. ட. க. ச)*

| | | | |
|---|---|---|---|
| ~~க~~ | ~~ட~~ | வா | ~~ச~~ |
| ~~த~~ | ~~ச~~ | ~~க~~ | ~~ட~~ |
| ~~ச~~ | த் | ~~த~~ | ~~க~~ |
| ~~ட~~ | ~~ச~~ | ~~த~~ | து |

விடை ..................

*(நீ. ழ. ல. ற)*

| | | | |
|---|---|---|---|
| க | ~~நீ~~ | ~~ல~~ | ~~ற~~ |
| ~~ற~~ | ~~ழ~~ | ~~நீ~~ | டி |
| ~~ல~~ | ~~நீ~~ | ~~ழ~~ | ~~ற~~ |
| ~~ற~~ | ர | ~~ல~~ | ~~ழ~~ |

விடை : ................

*(ந. ள. ன. கீ)*

| | | | |
|---|---|---|---|
| ~~ந~~ | ~~ள~~ | ~~கீ~~ | ~~ன~~ |
| ~~கீ~~ | ~~ன~~ | மா | ~~ள~~ |
| ~~ள~~ | ~~ன~~ | ~~ந~~ | ~~கீ~~ |
| ~~கீ~~ | ~~ள~~ | ன் | ~~ந~~ |

விடை : ................

@KTBS NOT TO BE REPUBLISHED

**IX. அறிந்து கொள்க :**

**சில அபூர்வ அமைப்பு**

* வெட்டுக்கிளிக்கு காதுகள் காலில் உள்ளன.
* நண்டுகளுக்குப் பற்கள் வயிற்றில் உள்ளன.

**X. ஔவையாரை பற்றி ஐந்து சொற்றொடர்கள் எழுதுக:**

**செயல்கள் 1**

* ‘நான்கு கோடி’ நாடகத்தை உணர்ச்சியுடன் நடிக்க.
* உண்மை, அன்பு, நாட்டுபற்று, அகிம்சை போன்ற பண்புகளை விளக்கும் நாட்டுப்பற்று மற்றும் நாட்டுப்புறக் கதைகளை நடித்துக் காட்டுக.
* தொலைக்காட்சியில் கண்டுகளித்த நாடகங்களை நடித்துக் காட்டுக.
* வீரபாண்டிய கட்டபொம்மன் போன்ற வீரர்களின் வாழ்வை நாடகமாக்கி நடித்துக்காட்டுக.

**கற்றலின் கேட்டலே நன்று.**

NOT TO BE REPUBLISHED @KTBS

## *15. தீராத விளையாட்டுப் பிள்ளை - கண்ணன்*

G1N1F7

தீராத விளையாட்டுப்பிள்ளை - கண்ணன்

தெருவிலே பெண்களுக் கோயாத தொல்லை.



*1.* தின்னப் பழங்கொண்டு தருவான் - பாதி

தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான் ;

என்னப்பன் என்னையன் என்றால் ; அதனை

எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான்



(-தீராத)

NOT TO BE REPUBLISHED @KTBS

2. தேனொத்த பண்டங்கள் கொண்டு - என்ன
செய்தாலும் எட்டாத உயரத்தில் வைப்பான்.
மானொத்த பெண்ணடி என்பான் - சற்று
மனமகிழும் நேரத்திலேகிள்ளி விடுவான்.

(-தீராத)

3. அழகுள்ள மலர் கொண்டு வந்தே - என்னை
அழ அழச் செய்தபின் கண்ணை மூடிகொள்
குழலிலே சூட்டுவேன் என்பான் - என்னைக்
குருடாக்கி மலரினைத் தோழிக்கு வைப்பான்.

(-தீராத)

4. பின்னலைப் பின்னின்றிழுப்பான் : - தலை
பின்னே திரும்புமுன்னேச்சென்று மறைவான்
வண்ணப்புதுச் சேலை தனிலே - புழுதி
வாரிச் சொரிந்தே வருத்திக் குலைப்பான்



NOT TO BE REPUBLISHED ©KTBS

5. புல்லாங் குழல் கொண்டு வருவான் :- அமுத
பொங்கித் ததும்பநற் கீதம் படிப்பான் ;
கள்ளால் மயங்குவது போலே - அதைக்
கண்மூடி வாய் திறந்தே கேட்டிருப்போம்.



(-தீராத)

6. அங்காந் திருக்கும் வாய்தனிலே - கண்ணன்
ஆறேழு கட்டெறும் பைப் போட்டு விடுவான்.
எங்காகிலும் பார்த்ததுண்டோ ? - கண்ணன்.
எங்களைச் செய்கின்ற வேடிக்கை யொன்றோ

(-தீராத)

- மகாகவி பாரதியார்

**யாதும் ஊரே, யாவரும் கேளிர்,**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா!**

NOT TO BE REPUBLISHED

## விடுகதைகள்

1. மரத்தில் உயர்ந்தமரம்
குடிக்கச் சுவைநீர் தரும் - அதுஎன்ன ?

2. பச்சை நிறத்தழகி
பவளவாய்ச்சிரிப்பழகி
முத்துச் சொல்லழகி - நான் யார் ?

3. ஒருமரத்துக்கு
ஆயிரம் தூண்கள் - அது என்ன ?

4. பகலில் தெரியாமல்
இரவில் தெரிவேன் - அது என்ன ?

5. எனக்குத்தலை ஒன்று
கண்கள் மூன்று - நான் யார் ?

6. பறப்பேன் !
வெளிச்சமும் கொடுப்பேன் - நான் யார் ?

7. வட்ட வடிவழகன்
வந்தானே காலையிலே
எட்ட நின்று பேசாமலே
சென்றானே மாலையிலே - அது என்ன ?

8. ஆயிரம் பேர் செய்த அழகான மண்டபம்
ஒருவன் கண்பட்டபோது உடைந்ததாம் மண்டபம்
- அது என்ன?

NOT TO BE REPUBLISHED @KTBS

9. ஒரு நெல் குத்தினேன்
வீடெல்லாம் உமி - அது என்ன ?

10. ஊருக் கெல்லாம்
ஒரே துப்பட்டி - அது என்ன ?

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. வானம்,

2. தேன்கூடு, 3. இளநீர், 4. நட்சத்திரங்கள், 5. சூரியன், 6. ஆலமரம், 7. மெழுகு வர்த்தி 8. கிளி, 9. தேங்காய், 10. மின்மினிப்பூச்சி.

**மாற்றங்களைக் கண்டுபிடிங்க !**



NOT TO BE REPUBLISHED

*6 மாற்றங்கள் உள்ளன. அவை :*

1. ..............
2. ..............
3. ..............
4. ..............
5. ..............
6. ..............

@KTBS
NOT TO BE REPUBLISHED

# *16. மகாத்மா காந்தி வழி*

காந்தித் தாத்தா நம்தாத்தா
கருணை மிக்க பெருந்தாத்தா
சாந்த மூர்த்தி என்றென்றும்
சத்திய மூர்த்தி நம்தாத்தா!



கண்ணிற் சிறந்த விடுதலையைக்
கருதி வாழ்ந்தார் நம் தாத்தா
மண்ணில் யாவர் வாழ்விற்கும்
வழிகாட்டிடுவார் நம் தாத்தா!

காந்தி சொன்ன வழிகளை
கடைப்பிடித்து நடந்திடின்
சாந்தி எங்கும் நிலவிடும்
சத்தியந்தான் வென்றிடும்.

அன்பு ஓங்கி வளர்ந்திடும்
அகிம்சை என்றும் நிலைத்திடும்
இன்ப வாழ்வு பெருகிடும்
ஏழையின் துன்பம் ஒழிந்திடும்.

உலகில் அமைதி ஏற்படும்.
யுத்தம் யாவும் ஒழிந்திடும்
கலகம் நீங்கி எங்குமே
கருணை வெள்ளம் பெருகிடும்.

- அழ வள்ளியப்பா

© TBS NOT TO BE REPUBLISHED

**I. *கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளி :***

*1.* காந்தித் தாத்தாவின் இரண்டு குணங்கள் யாவை ?

விடை

……………………………………………………………………

……………………………………………………………………

*2.* காந்தி சொன்ன வழிகளைக் கடைப்பிடித்தால் என்ன ஆகும் ?

விடை

……………………………………………………………………

……………………………………………………………………

*3.* அகிம்சையைக் கடைப்பிடிப்பதால் ஏற்படும் பயன்கள் யாவை ?

விடை

……………………………………………………………………

……………………………………………………………………

**II. *கோடிட்ட இடங்களை நிரப்புக :***

*1.* கண்ணிற் சிறந்த ………… கருதி வாழ்ந்தார்.

*2.* சாந்தி எங்கும் நிலவிட ………….. வழிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

*3.* காந்தித் தாத்தா ……………. மிக்க தாத்தா.

*4.* மண்ணில் எல்லோர் வாழ்விற்கு வழிகாட்டியவர் …….

NOT TO BE REPUBLISHED @KTBS

**III. *நிரப்புக :***

*(எ-டு) சாந்தி எங்கும் நிலவிடும்.*

1. *அன்பு ஓங்கி .............*
2. *இன்ப வாழ்வு ...........*
3. *ஏழை துன்பம் ...........*
4. *அகிம்சை என்றும் ...........*
5. *உலகில் அமைதி ............*
6. *கருணை வெள்ளம் ...........*

**IV. *பிரித்தெழுதுக :***

1. *என்றென்றும் ..................*
2. *கண்ணிற் சிறந்த ...............*
3. *கடைப் பிடித்து ...............*
4. *அகிம்சை யென்றும் ..............*
5. *உலகிலமைதி ................*
6. *கருணையுள்ளம் ..............*

NOT TO BE REPUBLISHED @KTBS

**V. *கோடிட்ட சொல்லுக்கு ஏற்ற எதிர்ச்சொல்லைக் கோடிட்ட இடத்தில் எழுதுக :***

1. *அகிம்சை வழியில் சென்றால் இன்ப வாழ்வு பெருகிடும்.*
   *இம்சை வழியில் சென்றால் ............ வாழ்வு பெருகிடும்.*
2. *காந்தி வழியில் நடந்தால் உலகில் அமைதி ஏற்படும்.*
   *........... யாவும் ஒழிந்திடும்.*

**VI. கீழுள்ள சொற்களைப் பயன்படுத்தி உம்சொந்த வாக்கியத்தில் எழுதுக :**

1. சாந்தி ...........................................................

   ...........................................................

2. சத்தியம் ...........................................................

   ...........................................................

3. அகிம்சை ...........................................................

   ...........................................................

4. கலகம் ...........................................................

   ...........................................................

5. கருணை ...........................................................

   ...........................................................

NOT TO BE REPUBLISHED @KTBS

**VII. கீழே உள்ள அடைப்புகளிலிருந்து சரியான விடையை எடுத்தெழுதுக.**

(சிங்கம் முழங்கியதால் ; குளிர் மிகுந்ததால் ; ;சூரியன் மறைந்ததால் ; பசி எடுத்ததால் ; பெருமழைப் பெய்ததால்)

1. ..................... குழந்தை அழுதது.
2. ..................... உடல் நடுங்கியது.
3. ..................... வெள்ளம் வந்தது.
4. ..................... விலங்குகள் பயந்து ஓடின.

**VIII.** ***படித்துப்பார்க்க :***



மான் ஒரு காட்டு விலங்கு. இதற்கு அழகிய கொம்புகள் உண்டு. இது மிகவும் வேகமாக ஓடும். இது தாவர உண்ணி. மான்களில் புள்ளிமான், கலைமான் என பலவகையுண்டு.

இதைப்போல பின்வரும் விலங்குகளைப்பற்றி எழுதுக.

பசு



...........................

...........................

...........................

குதிரை



...........................

...........................

...........................

@KTBS NOT TO BE REPUBLISHED

V2M9A2

# 17. கடல்
## (உரையாடல்)



அன்று சித்தரை மாதம், பௌர்ணமி நிலவு ஒளி வீசிக் கொண்டிருந்தது. மங்களூர்க் கடற்கரையில் மாணவர்களும் ஆசிரியர்களும் கடலின் அழகைக் கண்டு மகிழ்ந்து இரசித்துக்கொண்டிருந்தார்கள். அலைகள் கரைக்கு வருவதும் செல்வதுமாக இருந்தன. அக்காட்சியைக் காணக்கண் கோடி வேண்டும்.

அப்பொழுது மாணவர்கள், ஆசிரியர்களுடன் உரையாடத் தொடங்கினர்.

பாலு : அப்பப்பா ...... ஒன்றன்பின் ஒன்றாக எத்தனை அலைகள்! இவை எப்படி உண்டாகின்றன ஐயா ?

ஆசிரியர் : கடலின் மேற்பகுதியில் எப்போதும் காற்று வீசிக் கொண்டிருக்கும் அதனால் அலைகள் உண்டாகின்றன

கோபி : கடலுக்குள்ளும் அலைகள் இருக்குமா ஐயா ?

ஆசிரியர் : கடலுக்கு அடியில் அலைகள் இருக்காது. கடல் அலைகள் இல்லாமல் அமைதியாக இருக்கும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

உமா : (கடல் நீரைக் குடித்துப் பார்த்து) ஐயா, கடல் நீர் ஏன் உப்பாக உள்ளது ?

ஆசிரியர் : நிலத்தில் படிந்துள்ள உப்புக்கள், ஆறுகள் மூலமாக அடித்துச் செல்லப்பட்டுக் கடலில் சேர்கின்றன. கடல் நீர் ஆவியாகிக் கொண்டே இருக்கிறது. உப்பு மட்டும் கடலிலேயே தங்கிவிடுகிறது. இதனால்தான் கடல்நீர் உப்பாக உள்ளது.

அமுதா : கடலுக்குள் என்னென்ன உள்ளன? கூறுங்கள் ஐயா!

ஆசிரியர் : மாணவர்களே ! பூமியின் மேலிருப்பதைப் போன்றே கடலிலும் பாறைகள், மலைகள் மற்றும் ஆறுகள் இருக்கும். அங்கு வண்ண வண்ண மீன்கள், சுறாக்கள், கடல் ஆமைகள், கடற்குதிரைகள், டால்ஃபின்கள், நட்சத்திர ஆமைகள், திமிங்கலங்கள் மற்றும் பல்வேறு வகையான கடற்பாம்புகளும் உள்ளன.

மூர்த்தி : ஐயா ! கடற்கரையில் காணப்படும் நுண்ணிய மணல் எங்கிருந்து எப்படி உண்டாயிற்று.

ஆசிரியர் : கடற்கரையில் உள்ள பாறைகள் மற்றும் கடலில் உள்ள பாறைகளின் அரிப்பினாலும் நதிகள் கொண்டுவரும் மண்ணினாலும் உருவானதுதான் இந்த நுண்ணிய மணல்.

ரூபா : கடலின் ஆழம் எவ்வளவு என்று சொல்ல முடியுமா ? ஐயா ?

ஆசிரியர் : ஓ..... சொல்லலாமே ! உலகிலேயே மிக ஆழமான கடற் பகுதி சேலஞ்ஜ்டீப், இதனுடைய ஆழம் **31,614** அடிகள் இமய மலையே மூழ்கும் அளவுக்கு இப்பகுதி ஆழம். பசிபிக் மகா கடலில் உள்ளது.

©KTBS NOT TO BE REPUBLISHED

மாணவர் : நன்றி ஐயா ! கடலைப் பற்றி நாங்கள் சில செய்திகளை அறிந்து கொண்டோம்.

ஆசிரியர் : நல்லது, என் மாணவச் செல்வங்களே ! மனித வாழ்க்கையில் கடல்களும் சமுத்திரங்களும், முக்கிய பங்கினை வகிக்கின்றன. ஆழி இறைவனை அடித்தொழுது நாம் வணங்கி வாழ்த்துவோமாக !

**செயற்பாடு :**

1. உயிரினங்கள்



2. கடல் வாழ் உயிரினங்களை வட்டமிடுக.

@KTBS NOT TO BE REPUBLISHED

**படிக்க :**

சித்திரை மாதம் பௌர்ணமி நிலவு. காண கண் கோடி வேண்டும்.

கடலுக்கடியில் அலைகள் இருக்காது, கடல் நீர் ஆவியாகிக் கொண்டே இருக்கிறது.

உலகிலேயே மிக ஆழமான கடற் பகுதி சேலஞ்ஜ் டீப்.

கடலில் இருக்கும் உயிரினங்கள் மற்றும் பொருட்களின் படங்களை வரைக.

## I. வினாக்களுக்கு விடைதருக :

1. கடல் அலைகள் எவ்வாறு உண்டாகின்றன ?

........................................................................

........................................................................

2. எங்கு அலைகள் இருக்காது ?

........................................................................

........................................................................

3. கடல் நீர் ஏன் உப்பாக உள்ளது ?

........................................................................

........................................................................

4. கடலுக்குள் இருக்கும் நீர்வாழ் பிராணிகள் யாவை ?

........................................................................

........................................................................

5. கடற்கரையில் நுண்ணிய மணல் எவ்வாறு உண்டாயிற்று ?

........................................................................

........................................................................

6. கடலின் ஆழமான பகுதி எங்குள்ளது ? ஆழம் எவ்வளவு?

........................................................................

........................................................................

@KTBS NOT TO BE REPUBLISHED

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. அக்காட்சியைக் காண ............. கோடி வேண்டும்
2. கடலின் மேற்பகுதியில் எப்போதும் ........... வீசிக் கொண்டிருக்கும்.
3. கடல் நீர் ................ இருக்கும்.
4. சேலஞ்ஜ்டீப்பின் ஆழம் ................ அடிகள்
5. சேலஞ்ஜ்டீப் .............. மகா கடலில் உள்ளது.

## III. சேர்த்தெழுதுக :

1. மேல் + பகுதி = மேற்பகுதி
2. கடல் + உள் =
3. பல + வேறு =
4. அடி + தொழுது =
5. படிந்து + உள்ள =
6. மனம் + இன்றி =

## IV. குழுவில் சேராததை வட்டமிட்டுக்காட்டுக :

முத்து, பவளம், வைரம், உப்பு.

சூரியன், சந்திரன், நட்சத்திரம், மேகம்.

வெண்டை, தாமரை, அல்லி, ரோஜா.

கப்பல், பேருந்து, விமானம், மாட்டுவண்டி

கிரிக்கெட், ஹாக்கி, தொலைக்காட்சி, கைப்பந்து.

NOT TO BE REPUBLISHED @KTBS

**V. கொடுக்கப் பட்டிருக்கும் சொல்லுக்குரிய எதிர்ச் சொல்லைப் பாடப் பகுதியிலிருந்து எடுத்து நிரப்புக :**

1. குழந்தைகளுக்குக் கடல் என்றாலே ஒரே ............ (கவலை)
2. அலைகள் இல்லாமல் கடல் (ஆர்ப்பரிக்கும்) ............
3. கடல் நீர் ............... இருக்கும் (சுவை)
4. சேலஞ்ஜ்டீப் மிகவும் ................ (மேடு)
5. கடலைப் பற்றி ................ செய்திகளை அறிந்தோம் (சில)

**VI. சொல் அட்டைகளை இணைத்துத் தொடர்களை உருவாக்கி எழுதுக :**

| நேற்று | இன்று | சென்றோம் |
|---|---|---|
| கடற்கரைக்கு | சந்தைக்கு | |
| நாளை | லால்பாக் | செல்வோம் |

..............................................................

..............................................................

..............................................................

..............................................................

©KTBS NOT TO BE REPUBLISHED

கடலில் வாழும் நட்சத்திர மீன்களின் உடலில்
மூளை என்ற பகுதி கிடையாது.



NOT TO BE REPUBLISHED

# *18. சேவல் கூவுது*

U6A4Y6



சேவல் கூவுது, காகம் கரையுது
செங்கதிரோன் வரும் நேரமிது
ஆகா ! இன்னும் தூங்கிடலாமா !
அதிகாலையிலே கண் விழிப்போம் !



காலையில் தினம் படிப்பதினாலே
கல்மேல் எழுத்தெனப் பதியாதா!
வேலையோடு மன வேகமும் சேர்ந்தால்
வேண்டும் பொருள் கை கூடாதா !

NOT TO BE REPUBLISHED
© KTBS



தந்தை தாய் குரு தெய்வம் பெரியோர்
தங்களை அன்பாய் வணங்கிடுவோம்
சிந்தைக் கினிதாம் செந்தமிழ்கலைகள்
தேர்ந்தே நலம் பெற வாழ்வோமே !

- திரு பு. ஆ. முத்து கிருட்டிணன்.

**அருஞ்சொற்பொருள் :**

கரையுது = கூப்பிடுகிறது

செங்கதிரோன் = சூரியன், பரிதி.

பொருள் = செல்வம்

சிந்தை = அறிவு

தேர்ந்தே = தேர்வு செய்தே

© TBC NOT TO BE REPUBLISHED

## *பயிற்சி*

**I. *விடையளிக்க :***

*1.* சேவல் கூவும் நேரம் எது ?

விடை...........................................................................

...........................................................................

*2.* தினம் காலையில் என்ன செய்யவேண்டும் ?

விடை...........................................................................

...........................................................................

*3.* வேண்டும் பொருள் எப்போது கை கூடும் ?

விடை...........................................................................

...........................................................................

*4.* யார் யாரை வணங்க வேண்டும் ?

விடை...........................................................................

...........................................................................

**II. *கோடிட்ட இடங்களை நிரப்புக :***

*1.* செங்கதிரோன் உதிக்கும் நேரம் ..................

*2.* ............ யில் கண் விழிக்க வேண்டும்.

*3.* மனதிற்கினியது ................ கலைகள்.

*4.* தந்தை தாய் ................ தெய்வம்.

@KTBS NOT TO BE REPUBLISHED

**III. ஒத்த ஒலிநயச் சொற்களைப் பாடலிலிருந்து எழுதுக:**

*1.* காலை - வேலை

........... - ...........

........... - ...........

***செயல் முறை :***

*மாணவர்கள் இரண்டு குழுக்களாகப் பிரிய வேண்டும்.*

*ஒரு குழுவினர் 10 பெயர் சொற்களை ஒன்றன் பின் ஒன்றாகக் கூற வேண்டும்.*

*இன்னொரு குழுவினர் இப்பெயர் சொற்களுக்கு ஏற்ற அடை மொழிகளைச் சேர்த்துக் கூறவேண்டும்.*
*(எ-டு) பேசும் கிளி ; பருத்த மரம் ; உயர்ந்த மனிதன்.*

*இப்பொழுது இரண்டாடம் குழுவினர் 10 வினைச் சொற்களைக் கூற வேண்டும்*
*(எ-டு) எழுதினான், பாடினான், பேசியது.*

*முதற் குழுவினர் அதற்கேற்ப அடை மொழிகளைச் சேர்த்துக் கூற வேண்டும்.*
*(எ-டு) அழகாக எழுதினான், தெளிவாகப் பாடினான். கொஞ்சிப் பேசியது.*

*அதிக மதிப்பெண்கள் பெற்ற குழுவிற்கு வெற்றி*

***சூரியன் உதிக்கும் முன் சேவல் கூவும்.***

NOT TO BE REPUBLISHED ©KTBS

1. கருணை காட்டுங்கள் என்னும் கதையைப் படித்து, வினாக்களுக்கு விடையளிக்க.

பள்ளி மாணவர்களை ஆசிரியர் சுற்றுலா அழைத்துச் சென்றார். வழியில் ஒருகுளத்திற்குச் சென்றனர். அங்கு நிறைய தவளைகள் இருந்தன. மாணவர்கள் இருவர் அங்கு கிடைத்த கற்களைக் கொண்டு, தவளைகள் மீது எறியத் தொடங்கினர். தவளைகள் துடி துடித்தன. அங்கு வந்த ஆசிரியர் மாணவர்கள் கல் எறிவதைத் தடுத்து, அறிவுரை கூறினார். மாணவர்களே! பிராணிகளும் நம்மைப் போல் உயிருள்ளவை. அவற்றை துன்புறுத்தக் கூடாது. அவற்றிடம் கருணையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றார் ?

1. பள்ளி மாணவர்கள் எங்குச்சென்றனர் ?
2. குளத்தில் என்ன பார்த்தனர் ?
3. எவற்றின் மீது கல் எறியத் தொடங்கினர் ?
4. ஆசிரியர் கூறிய அறிவுரை யாது ?
5. இக்கதையின் மூலம் நீங்கள் அறிந்து கொண்டதென்ன ?

1. ______________________________

2. ______________________________

3. ______________________________

4. ______________________________

5. ______________________________

@KTBS NOT TO BE REPUBLISHED

வண்ணம் தீட்டுக.

கிறுக்கலாகத் தெரியும் படத்தில் ஒரு பூ மறைந்துள்ளது கண்டுபிடியுங்கள்.

நட்சத்திரம் உள்ள பகுதிக்கு ரோஸ் வண்ணமும் புள்ளி உள்ள பகுதிக்கு பச்சை வண்ணமும் தீட்டுங்கள்.



© NCERT NOT TO BE REPUBLISHED

விடை ______________

தண்ணீரில் வாழுகின்ற மீன் அதை விட உயர்ந்த
பாலிலே வாழும்படி கெஞ்சினாலும் வாழாது,
வாழவும் முடியாது.

# 19. பள்ளி ஆண்டு விழா

Q2S1M6



பள்ளியிலே ஆண்டு விழா
படிக்கும் மாணவர் திருவிழா
துள்ளி நாங்கள் கிளம்பிட்டோம்
தூய ஆடைகள் அணிந்திட்டோம் !

சிறப்பு விருந்தினர் வந்ததும்
சிறப்பாய் நாங்கள் வரவேற்றோம்
பொறுப்பாய் நடக்கும் நிகழ்வுகளில்
எங்கள் திறமையைக் காட்டிடுவோம் !

பேச்சுப் போட்டி கவிதைப் போட்டி
பற்பல போட்டியில் வென்றிடுவோம்
மூச்சுப்பயிற்சி போட்டியான
யோகாவிலும் சாதித்திடு வோம் !

NOT TO BE REPUBLISHED

வந்த விருந்தினர் மகிழ்ந்திடுவார்
உவகை குளிர வாழ்த்திடுவார்
இந்தப் பள்ளி சிறந்தது என்றே
இனிய முடிவைக் கூறிடுவார்.

- கன்னிக் கோவில் இராஜா

***அருஞ்சொற்பொருள் :***

*தூய = தூய்மையான; சிறப்பு = மேன்மை; துள்ளி = குதித்து; நிகழ்வுகளில் = நிகழ்ச்சிகளில்; உவகை = மகிழ்ச்சி.*

## பயிற்சி

**I. *விடையளிக்க :***

1. படிக்கும் மாணவரின் திருவிழா எது ?
2. சிறப்பு விருந்தினரை எவ்வாறு வரவேற்றனர் ?
3. ஆண்டு விழாவிற்காக நடைபெற்ற போட்டிகள் யாவை?
4. வந்த விருந்தினர் பள்ளியைப்பற்றிக் கூறியது யாது ?

**II. *கோடிட்ட இடங்களை நிரப்புக :***

1. துள்ளி நாங்கள் ..................
2. எங்கள் ................ காட்டிடுவோம்.
3. பற்பலப் போட்டியில் ....................
4. இந்த பள்ளி சிறந்ததென்ற ................... முடிவைக் கூறிடுவார்.

NOT TO BE REPUBLISHED ©KTBS

**III. பிரித்தெழுதுக :**

1. கிளம்பிட்டோம்.
2. கவிதைப் போட்டி
3. பற்பல
4. வாழ்த்திடுவார்.

**IV. எதிர்ச் சொற்களை எழுதுக :**

1. தூய x .................
2. உவகை x .................
3. இனிய x .................
4. மகிழ்ந்து x .................

**வாகனங்களின் பெயர்களை எழுதுக.**






...............................    ...............................

NOT TO BE REPUBLISHED @KTBS





.............................. ..............................






.............................. ..............................





.............................. ..............................

© KTBS NOT TO BE REPUBLISHED

# 20. விறகு வெட்டியும் வனதேவதையும்

T1X8T5



©KTBS NOT TO BE REPUBLISHED

ஒரு காட்டில் ஒரு விறகுவெட்டி ஒரு மரத்தை வெட்டிக் கொண்டு இருந்தான். அந்த மரம் ஓர் ஆற்றின் கரையில் இருந்தது. மரத்தை வெட்டும்போது கையில் இருந்த கோடாரி தவறி ஆற்றுக்குள் விழுந்து விட்டது. ஆறு மிகவும் ஆழமாய் இருந்தபடியால் தண்ணீருக்குள் இறங்கி, அவனால் கோடாரியை எடுக்க முடியவில்லை. அதனால் கரையில் உட்கார்ந்து அழ ஆரம்பித்தான்.

அவனது அழுகுரலைக் கேட்ட வனதேவதை அவன் மேல் இரக்கங்கொண்டு அவன் முன்பு தோன்றி, ஏன் அழுகிறாய் ? என்று கேட்டது.

கோடாரி தண்ணீருக்குள் விழுந்து விட்டதாகவும், அது கிடைக்காவிட்டால் தன் பிழைப்புக்கு வழி இல்லை என்றும் விறகுவெட்டி கூறினான்.

வனதேவதை தண்ணீருக்குள் மூழ்கி ஒரு தங்கக் கோடாரியோடு வெளியே வந்தது. அதை விறகுவெட்டியிடம் கொடுத்தது. அதைப் பார்த்த அவன், அது தன் கோடாரி அல்ல என்றும், அது தனக்கு வேண்டாம் என்றும் மறுத்துவிட்டான்.

வனதேவதை மீண்டும் தண்ணீருக்குள் மூழ்கி ஒரு வெள்ளிக் கோடாரியை எடுத்துவந்து கொடுத்தது. அதுவும் தன்னுடையது அல்ல என்று கூறி விறகுவெட்டி மறுத்துவிட்டான்.



வனதேவதை மூன்றாவது தடவையாகத் தண்ணீருக்குள் மூழ்கி விறகுவெட்டியின் கோடாரியை எடுத்து வந்து கொடுத்தது. அதைப் பார்த்ததும் விறகுவெட்டி மிகுந்த மகிழ்ச்சி அடைந்து, இரண்டு கைகளாலும் அதை வாங்கிக் கொண்டான்.

விறகுவெட்டியின் நேர்மையைப் பார்த்த வனதேவதை மகிழ்ச்சி அடைந்தது. நீ உண்மையாக நடந்து கொண்டபடியால் உன்னுடைய கோடாரியோடு இந்தத் தங்கக் கோடாரியையும், வெள்ளிக் கோடாரியையும் உனக்கு பரிசாகக் கொடுக்கிறேன் எடுத்துக் கொள் என்று வனதேவதை சொல்லிற்று.

மூன்று கோடாரிகளோடு விறகுவெட்டி வீடு திரும்பினான். காட்டில் நடந்த அதிசயத்தை அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் கூறினான்.

NOT TO BE REPUBLISHED © KTBS

இதைக் கேட்டவர்களில் ஒருவன் உடனே காட்டிற்குச் சென்றான். விறகுவெட்டியின் கோடாரி தண்ணீருக்குள் விழுந்த அதே இடத்தில் தனது கோடாரியை போட்டான். கரையில் உட்கார்ந்து அழுதான்.



வனதேவதை வந்தது. காரணத்தைக் கேட்டது. தண்ணீருக்குள் மூழ்கி ஒரு தங்கக் கோடாரியை எடுத்து வந்து காட்டியது. அதைப் பார்த்த பேராசைக்காரன், ஆமாம் அதுதான் என்று சொல்லிக்கொண்டே தங்கக் கோடாரியைக் கைப்பற்றப் போனான்.

உடனே வனதேவதை “ஓ...! பேராசைக்காரனே! உள்ளத்தை அறியக்கூடிய உன் தெய்வத்தையா ஏமாற்றப் பார்க்கிறாய் ? உன்னுடைய கோடாரியைக் கூட உனக்கு கொடுக்க முடியாது ஓடிப்போ!” என்று கூறி மறைந்தது.

பேராசைக்காரன் வெறுங்கையோடு வீடு திரும்பினான்.

பேராசை பெருநட்டம்.

அதிக ஆசை கொண்டால் உள்ளதும் பறிபோகும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

## பயிற்சி

**I. ஒன்று அல்லது இரண்டு வரிகளில் விடை தருக :**

1. காட்டில் விறகு வெட்டி என்ன செய்து கொண்டிருந்தான் ?

 ..........................................................................

 ..........................................................................

2. விறகு வெட்டியின் கோடாரி எங்கு விழுந்தது ?

 ..........................................................................

 ..........................................................................

3. வனதேவதை விறகு வெட்டியிடம் என்ன கேட்டது ?

 ..........................................................................

 ..........................................................................

4. வனதேவதை மகிழ்ந்து விறகுவெட்டிக்கு பரிசாகக் கொடுத்தது என்ன ?

 ..........................................................................

 ..........................................................................

5. விறகு வெட்டியின் நேர்மையினை விளக்குக ?

 ..........................................................................

 ..........................................................................

6. பேராசைக்காரனைப் பார்த்து வனதேவதை கூறியது யாது ?

 ..........................................................................

 ..........................................................................

@KTBS NOT TO BE REPUBLISHED

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. விறகு வெட்டியின் கோடாரி ................ விழுந்தது.
2. விறகு வெட்டிக்கு வனதேவதை ................ கோடாரியையும் ................ கோடாரியையும் பரிசாகக் கொடுத்தது.
3. பேராசைக்காரனுக்கு வனதேவதை கொடுப்பதற்குக் காட்டிய கோடாரி ................ ஆனது.
4. பேராசை ............. ஆகும்.

**III. சேர்த்து எழுதுக :**

1. வனம் + தேவதை = ....................
2. இரக்கம் + கொண்டு = ..................
3. தங்கம் + கோடாரி = ..................
4. வெள்ளி + கோடாரி = ..................
5. பெருமை + ஆசை = ..................

**IV. எதிர்ச்சொல் எழுதுக :**

1. அழுதல் x .................
2. தோன்றி x .................
3. மகிழ்ச்சி x .................
4. உண்மை x .................
5. இலாபம் x .................

NOT TO BE REPUBLISHED @KTBS

**V. கீழே குறிப்பிட்டுள்ள இடங்களில் நீங்கள் பார்த்தவற்றை எழுதுக :**

*பூங்கா ............... ............... ............... ...............*

*பள்ளி ............... ............... ............... ...............*

*பேருந்து நிலையம் ............ ............ ............ .............*

*கடைவீதி ............... ............... ............... ...............*

*மிருகக்காட்சிச்சாலை ............ ............ ............ .............*

*உமக்குத் தெரிந்த மரங்களின் பெயர்களை எழுதுக :*

1. ..........................
2. ..........................
3. ..........................
4. ..........................

*நீங்கள் மலர்களின் பெயர்களை எழுதுக :*

1. ..........................
2. ..........................
3. ..........................
4. ..........................
5. ..........................

@KTBS NOT TO BE REPUBLISHED

**VI. கீழ்க் கண்ட பாடலைப் படித்து அறிக :**

தூயகாற்றும் நன்னீரும்

சுண்டப் பசித்த பின் உணவும்

நோயை ஓட்டி விடுமப்பா !

நூறு வயசு தருமப்பா !

**VII. குழுவில் சேராததை வட்டமிடுக :**

1. தங்கம், செம்பு, பாதரசம், வெள்ளி
2. காடு, வனம், பூங்கா, வீடு
3. தேவதை, கணபதி, திருமால், முருகன்.
4. ஆறு, நதி, நீர்வீழ்ச்சி, குட்டை.

**VIII. ஒத்த ஒலிப்புடைய சொற்களை எழுதுக :**

காடு .............. .............. .............. ..............

வனம் .............. .............. .............. ..............

பலம் .............. .............. .............. ..............

கன்று .............. .............. .............. ..............

விறகு .............. .............. .............. ..............

**பசியால் வாடும் ஒருவனுக்கு மீன் தருவதைவிட மீன் பிடிப்பதற்கு கற்றுத்தரவேண்டும்.**

**- சீனப்பழமொழி**

NOT TO BE REPUBLISHED @KTBS

வண்ணம் தீட்டுக.



©KTBS NOT TO BE REPUBLISHED

# திங்கள் பனிரெண்டு



சித்தரை வைகாசி ஆனி ஆடி ஆவணி
புரட்டாசி ஐப்பசி கார்த்திகை மார்கழி
ஒத்துவரும் தை மாசி பங்குனி எல்லாம் இவை
ஓராண்டின் பனிரண்டு திங்களின் பெயர்.

கொத்துக் கொத்தாய் பூவிருக்கும் சித்திரையிலே
கூவும் குயில் ! மழை பெய்யும் கார்த்திகையிலே
மெத்தகுளி ராயிருக்கும் மார்கழியிலே மிக
வெப்பக்கதிர் காட்சிதரும் தைப் பிறப்பிலே!

- பாரதிதாசன்.

@KTBS NOT TO BE REPUBLISHED

**படித்தறிக :**

திசைகள் :

| | | | |
|---|---|---|---|
| கதிர் | முளைப்பது | கிழக்கு | - அதன் |
| எதிர் | இருப்பது | மேற்கு | |
| முதிர் | இமயம் | வடக்கு | - அதன் |
| எதிர் | குமரி | தெற்கு | |

- பாரதிதாசன்

**படித்தறிக :**

| | |
|---|---|
| கொத்து கொத்தாய் | மெத்த குளிராயிருக்கும் |
| கூவும் குயில் | வெப்பக்கதிர். |
| மழைப் பெய்யும் | |

@KTBS
NOT TO BE REPUBLISHED

### பயிற்சி

**I. *விடையளிக்கவும் :***

*1.* தமிழ் மாதங்களின் பெயர்களை வரிசையாக எழுதுக.

*1. .................... 2. .................. 3. ............... 4. .............*

*5. .................... 6. .................. 7. ............... 8. .............*

*9. .................. 10. ................. 11. ............. 12. .............*

*2.* கொத்துக் கொத்தாய் எந்தமாதத்தில் பூ பூக்கும் ?

*3.* எம்மாதத்தில் மழைப் பொழியும் ?

*4.* மார்கழிமாதம் எப்படி இருக்கும் ?

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. பூவிருக்கும் சித்திரையில் ............. கூவும்.
2. ............ பெய்யும் கார்த்திகையில்.
3. மெத்தகுளிராயிருக்கும் ...............
4. மிக வெப்பக் கதிர் ............. பிறப்பில்.

## III. பிரித்தெழுதுக :

1. பூவிருக்கும்
2. மழைப் பெய்யும்
3. வெப்பக்கதிர்
4. தைப்பிறப்பு

## IV. பொருத்தி எழுதுக :

| அ | ஆ |
|---|---|
| 1. சித்திரை | அ. வெப்பம் |
| 2. கார்த்திகை | ஆ. குளிர் |
| 3. மார்கழி | இ. மழை |
| 4. தை | ஈ. பூ பூக்கும். |

@KTBS
NOT TO BE REPUBLISHED

**ஆடிப்பட்டம் தேடி விதை**

# 21. வன விலங்குகளைக் காப்போம்

X3V1U9
















**முன்னுரை :**

அழகு மிகு விலங்குகளும் பறவைகளும் இல்லாவிடில் நம்முடைய வாழ்க்கை பயனற்றது ஆகிவிடும், விலங்குகளையும், பறவைகளையும் பாதுகாக்கச் சரணாலயங்கள் ஏற்படுத்த வேண்டும், என்றார் பண்டித ஜவஹர்லால் நேரு. அவர் வாக்கு நிறைவேறும் வகையில், நமது அரசாங்கம் ஆங்காங்கு பறவைகள் பாதுகாப்பு நிலையங்களையும், வன விலங்குச் சரணாலயங்களையும் ஏற்படுத்தியுள்ளது. நம் நாட்டு தேசிய விலங்காக புலியும், தேசிய பறவையாக மயிலும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

**வன விலங்குகளின் பயன் :**

வன விலங்குகளும், பறவைகளும் நமக்கு அதிகளவு பயனைத் தருகின்றன.

அவை நாட்டிற்கு அழகையும் பொலிவையும் தருகின்றன. மேலும் மனிதர்களுடன் அதிக தொடர்புடையன மான்கள் நமக்கு மான் கொம்பு, தோலையும், யானை யானைத் தந்தத்தையும் தருகின்றது. சில விலங்குகளின் கொழுப்பு நமக்கு மருந்தாகப் பயன்படுகிறது. யானை, புலி, சிறுத்தை சிங்கம், காண்டாமிருகம் முதலிய விலங்குகள் நமக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்றன. தவளை, எலி, குரங்கு போன்றவை ஆராய்ச்சிக்குப் பயன்படுகின்றன.

**வன விலங்கு பாதுகாப்பு :**

காட்டில் உள்ள விலங்குகளையும் பறவைகளையும் மனிதன் அழித்து வருகின்றான். வேட்டையாடவும், பொழுது போக்கவும் காடுகளையும், விலங்குகளையும் அழித்து விட்டான். இதனால் அவை ஊர்களுக்குள் புகுந்து

@KTBS NOT TO BE REPUBLISHED

உயிர்ச் சேதத்தை ஏற்படுத்துகின்றன. நம் சங்கத் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் விலங்கினங்களையும், பறவையினங்களையும் தற்பொழுது காண முடிவதில்லை. சிறுத்தை, சிங்கம், புலி, கரடி, காண்டா மிருகம் போன்ற விலங்குகள் வர வர குறைந்து வருவதால் இவற்றைப் பாதுகாப்பது அவசியம். எனவே அரசு, வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் ஒன்றை இயற்றி, அதை நடைமுறைப் படுத்தியுள்ளது.

***சரணாலயங்கள் :***

கருநாடகத்தில் மைசூருக்கு அருகில் முதுமலை, பந்திப்பூர், நாகரஹொளே, பன்னேரகட்டா போன்ற இடங்களில் சரணாலயங்கள் உள்ளன. ரங்கனதிட்டு என்னுமிடத்தில் பறவைகள் சரணாலயம் உள்ளது. இங்குள்ள விலங்குகளும் பறவைகளும், எவ்வகையான பயமும் இன்றி வாழ்கின்றன. ஆந்திரப் பிரதேசத்தில் 'குட்டர்,' 'நாகரொம்,' 'பக்கால்.' என்னுமிடங்களிலும் குஜராத் மாநிலத்தில் 'கிர்' என்னுமிடத்திலும் மத்தியப்பிரதேசத்திலுள்ள 'பன்னா' என்ற இடங்களிலும் வன விலங்கு சரணாலயங்கள் உள்ளன.

***மாபெரும் சரணாலயம் :***

இந்தியாவில் 'கன்ஹா' என்னும் இடத்திலுள்ள சரணாலயம் மிகப் பெரியது. இங்குப் பலவகைப் பறவைகளும், மான் இனங்களும், சிறுத்தை, புலி, சிங்கம், கரடி போன்ற விலங்குகளும் ஏராளமாக வளர்க்கப்படுகின்றன. தமிழ் நாட்டிலுள்ள வேடந்தாங்கல் என்னுமிடத்திற்கு பல்லாயிரக் கணக்கான கிலோ மீட்டர் தூரத்திலிருந்து அயல்நாட்டுப் பறவைகள் வந்து தங்கிச் செல்கின்றன. பறவைகள் இங்கு முட்டையிட்டு பொரித்து இனவிருத்தி செய்து தங்கள்

© KTBS NOT TO BE REPUBLISHED

குஞ்சுகளை உடன் அழைத்துச் செல்கின்றன.

முடிவுரை :

காடுகள் அழிவதைத் தடுக்க வேண்டும். இதற்கு ஒரு வகையில் உதவி செய்வது மரம் நடு விழா. வன விலங்குகளைப் பாதுகாப்பதற்கும் நாட்டில் மழை பொழிவதற்கும் காடுகள் தேவை. விலங்குகளை பாதுகாப்பது அருமையாயினும் மக்கள் பிற உயிர்களிடமும் அன்பும், கருணையும் கொண்டு பாதுகாப்பது நலம் பயக்கும்.

**படித்தறிக :**

விலங்குகளையும் பறவைகளையும் பாதுகாக்கச் சரணாலயங்கள் ஏற்படுத்த வேண்டும்.

தவளை, குரங்கு எலி போன்றவை ஆராய்ச்சிக்குப் பயன்படுகின்றன.

காடுகளை அழிப்பதால் வனவிலங்குகள் ஊருக்குள் வந்து விடுகின்றன.

கருநாடகத்தின் முதுமலை, பந்திப்பூர், நாகரஹொளே பன்னேரகட்டா, போன்ற இடங்களில் சரணாலயங்கள் உள்ளன.

இந்தியாவில் 'கன்ஹா' என்னும் இடத்திலுள்ள சரணாலயம் மிகப் பெரியது.

காடுகள் அழிப்பதைத் தடுக்க வேண்டும்.

தமிழ் நாட்டிலுள்ள வேடந்தாங்கலுக்கு பல்லாயிரக் கணக்கான கிலோமீட்டர் தூரத்திலிருந்து அயல் நாட்டுப் பறவைகள் வந்து தங்கிச் செல்கின்றன.

NOT TO BE REPUBLISHED @KTBS

## I. *அருஞ்சொற் பொருள் :*

1. வனம் = காடு
2. வாக்கு = சொல்
3. பொலிவு = சிறப்பு
4. ஈட்டுதல் = சம்பாதித்தல்
5. சேதம் = அழிவு
6. சரணாலயம் = பாதுகாப்பிடம்

### *பயிற்சி*

## II. *எதிர்ச் சொல் தருக :*

1. குறைவு x
2. அருகில் x
3. பெரியது x
4. பல x
5. அழிப்பது x

@KTBS
NOT TO BE REPUBLISHED

## III. *வினாக்களுக்கு விடை தருக :*

1. வனவிலங்குகளைப் பாதுகாக்க பண்டித ஜவஹர்லால் நேரு கூறியது என்ன ?

விடை ..................................................................................

..................................................................................

2. நம் நாட்டின் தேசிய விலங்கு யாது ?

விடை ....................................................................

....................................................................

3. நம் நாட்டின் தேசிய பறவை எது ?

விடை ....................................................................

....................................................................

4. விலங்குகள் நமக்கு தரும் செல்வங்கள் யாவை ?

விடை ....................................................................

....................................................................

5. ஆராய்ச்சிக்குப் பயன் படும் விலங்குகள் யாவை ?

விடை ....................................................................

....................................................................

6. மக்கள் காடுகளையும் விலங்குகளையும் எவ்வாறு அழித்தனர் ?

விடை ....................................................................

....................................................................

7. கருநாடகத்தில் சரணாலயங்கள் எங்குள்ளன ?

விடை ....................................................................

....................................................................

@KTBS
NOT TO BE REPUBLISHED

8. ஆந்திரப்பிரதேசத்தில் வனவிலங்கு சரணாலயங்கள் எங்குள்ளன ?

விடை ..................................................................

..................................................................

9. இந்தியாவில் உள்ள மிகப் பெரிய சரணாலயம் எது ? அது எங்குள்ளது ?

விடை ..................................................................

..................................................................

10. காடுகள் அழிவதைத் தடுக்க வேண்டும் ஏன் ? எப்படி?

விடை ..................................................................

..................................................................

@KTBS NOT TO BE REPUBLISHED

## IV. பொருத்துக :

| | | |
|---|---|---|
| 1. | தேசியப்பறவை | ஹாக்கி |
| 2. | தேசிய விலங்கு | ஆலமரம் |
| 3. | தேசிய மலர் | மயில் |
| 4. | தேசிய மரம் | புலி |
| 5. | தேசிய விளையாட்டு | தாமரை |

## V. பின் வரும் சொற்றொடர்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக :

1. சரணாலயம்
2. மயில்

3. பாதுகாப்போம்

4. ஆராய்ச்சி

**VI. விடுபட்ட இடத்தில் கீழ்க்கண்டவற்றின் ஒலிகளைப் பொருத்தி எழுதுக :**

1. தேனீ - அகவும்
2. குயில் - பாடும்
3. நரி - உறுமும்
4. புலி - கூவும்
5. மயில் - ஊளையிடும்

**இப்பாடலைப் பாடிப் பழகுக :**

கல்லும் மலையும் குதித்துவந்தேன் - பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன்.
எல்லை விரிந்த சமவெளி எங்கும் - நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்,
ஏறாத மேடுகள் ஏறிவந்தேன் - பல
ஏரி குளங்கள் நிரப்பி வந்தேன்,
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.

**VII. மாறியுள்ள எழுத்துக்களை முறைப் படுத்தி எழுதுக :**

| | | | |
|---|---|---|---|
| ங் | சி | ம் | க |

..........................

@KTBS
NOT TO BE REPUBLISHED

| | | | |
|---|---|---|---|
| று | சி | தை | த் |

..........................

| | | | |
|---|---|---|---|
| னை | நீ | யா | ர் |

..........................

| | | |
|---|---|---|
| ர | க | டி |

..........................

| | |
|---|---|
| ன் | மா |

..........................

| | |
|---|---|
| லி | பு |

..........................

ஆறு வித்தியாசங்கள் கண்டுபிடிக்க.



1. ____________________
2. ____________________
3. ____________________
4. ____________________
5. ____________________
6. ____________________



©KTBS
NOT TO BE REPUBLISHED

பொருத்தமான வால்களைத் தேர்ந்தெடுத்து விலங்குகளுடன் இணைக்கவும் :

1.  

2.  

3.  

4.  

5.  

©KTBS
NOT TO BE REPUBLISHED

# *22. நல்வழி*

*1.* ஆற்றுப்பெருக்கு அற்று அடிசுடும் அந்நாளும்
அவ்வாறு ஊற்றுப் பெருக்கால் உலகு ஊட்டும்-ஏற்றவர்க்கு
நல் குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லை எனமாட்டார் இசைந்து.

- ஔவையார்

***கருத்துரை :***

ஆறு, வெள்ளப் பெருக்கு இல்லாமல் நடப்பவருடைய காலைச் சுடுகின்ற அளவிற்கு வறண்ட காலத்திலும் கீழ் நீராகிய ஊற்று மூலம் உலக மக்களுக்கு உணவு அளிக்கும். அது போல நல்ல குடும்பத்தில் பிறந்த நன்மக்கள் தாங்கள் வறுமையில் வாடினாலும் வருவோர்க்கு இல்லை என்று சொல்லாமல் கொடுப்பார்கள்.

***அருஞ்சொற்பொருள் :***

பெருக்கு - வெள்ளம்

அற்று - இல்லாமல், நின்று போய்

அடிசுடும் - மணல் வெப்பம் ஏற்று நடப்பவர் கால் சுடும்.

ஊட்டும் - உணவு அளிக்கும்.

நல்கூர்ந்தார் - வறுமை உடையோர்

ஏற்றவர்க்கு - இல்லை என்று கேட்பவர்க்கு.

இசைந்து - மனம் ஒப்பி.

@KTBS NOT TO BE REPUBLISHED

**2.** *ஒருநாள் உணவை ஒழிஎன்றால் ஒழியாய்*
*இருநாளுக்கு ஏல்என்றால் ஏலாய்-ஒருநாளும்*
*என்நோவு அறியாய் இடும்பைகூர் என் வயிறே !*
*உன்னோடு வாழ்தல் அரிது.*

- ஔவையார்

***கருத்துரை :***

துன்பம் மிகுதற்குரிய என் வயிறே ! உணவு கிடைக்காத போது ஒருநாள் உண்ண வேண்டிய உணவை விட்டு இரு என்றால் இருக்கமாட்டாய். உணவு கிடைக்கும்போது இரண்டு நாட்களுக்கும் சேர்ந்து உண் என்றாலும் உண்ணமாட்டாய். ஒவ்வொரு நாளும் நான் உணவு தேடுவதற்குப் படும் துன்பத்தை நீ அறிய மாட்டாய், எனவே இத்தகைய இயல்பு கொண்ட உன்னோடு நான் கூடி வாழ்தல் கடினம்.

***அருஞ்சொற்பொருள் :***

| | | |
|---|---|---|
| இடும்பை | - | துன்பம் |
| ஏல் | - | ஏற்றுக்கொள் |
| நோவு | - | துன்பம் |
| அரிது | - | கடினம் |
| ஒழி | - | விட்டு விடு |

தமிழ் மொழியின் எழுத்துக்கள் ‘அ’ வில் ஆரம்பித்து, கடைசியில் ‘ன்’ என்ற எழுத்துடன் முடிகிறது. அது போலவே திருக்குறளும் ‘அ’ வில் ஆரம்பித்து கடைசியில் ‘ன்’ என்று முடிகின்றது.

@KTBS NOT TO BE REPUBLISHED

# 23. குடியரசுத் தலைவரான நல்லாசிரியர்

C4U9P4



கல்வி என்பது எழுத்தறிவை மட்டுமே
கொடுக்கக் கூடியதாக இருக்கிறது.
அது, மனிதனைச் சிந்திக்க வைக்கக்
கூடியதாகவும், புரிந்து கொள்ள வைப்பதாகவும்,
பொறுமை வளர்ப்பதாகவும் இருத்தல் வேண்டும்.

இவ்வாறு கூறியவர் டாக்டர். இராதாகிருஷ்ணன் அவர்கள். இவர் இந்தியக் குடியரசுத்தலைவராகப் பதவி வகித்தாலும் தாம் ஓர் ஆசிரியர் என்பதிலேயே பெருமை கொண்டவர். அவரது வாழ்க்கை வரலாற்றை அறிந்து, அவர் வழியில் நடப்போம்.

கி.பி. 1888 - ஆம் ஆண்டு செப்டம்பர் 5 - ஆம் நாள் திரு. இராதாகிருஷ்ணன் திருத்தணியில் பிறந்தார். இவருடைய தந்தையார் திரு. வீராசாமி ஐயர், தாயார் திருமதி. சீதம்மாள். தொடக்கக் கல்வியைத் திருத்தணியிலும், திருப்பதியிலும் முடித்தார். உயர் கல்வியை வேலூர் ஊரிசுக் கல்லூரியிலும், சென்னையிலும் கற்றுத் தேர்ந்தார்.

டாக்டர். இராதாகிருஷ்ணன் சென்னை மாநிலக் கல்லூரியில் பேராசியராகத் தம் பணியைத் தொடங்கினார். தன்னுடைய எளிய, கனிவான தோற்றத்தாலும், கற்பித்தல் திறத்தாலும் மாணவர்களின் உள்ளங்களைக் கொள்ளைக் கொண்டார்.

NOT TO BE REPUBLISHED @KTBS

மாணவர்களுக்கு நல்ல நண்பராகவும், வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். இந்தியாவிலுள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களும் டாக்டர். இராதாகிருஷ்ணன் அவர்களைப் பணியமர்த்த விரும்பி அழைத்தன. ஆனால், இவர் மைசூரு பல்கலைக் கழகத்தில் தத்துவப் பேராசிரியரானார். பின் கல்கத்தா பல்கலைக் கழகத்திலும் பேராசிரியர் பணியினை ஏற்றார்.

இவர் ஆங்கிலத்தில் தங்கு தடையின்றி மடைதிறந்த வெள்ளம் போலப் பேசும் ஆற்றல் வாய்ந்தவர். உலகப் பல்கலைக் கழகங்கள் இவருக்குப் பதினேழு முறை டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தன.

இவர் ஆசிரியர் பணிக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டாலும், நாட்டு விடுதலைப் போராட்டத்திலும் பங்கு கொண்டார். அண்ணல் காந்தியடிகள், நேரு போன்ற தலைவர்களுடன் இணைந்து போராடினார். நாடு விடுதலை அடைந்த பிறகு இரண்டு முறை இந்தியக் குடியரசுத் துணைத் தலைவராகப் பொறுப்பேற்றார். 1962 - ஆம் ஆண்டில் இந்தியக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

தம் பிறந்த நாளை ஆசிரியர் தினமாகக் கொண்டாட வேண்டும் என்று விரும்பினார். அவருடைய விருப்பப்படி ஆண்டுதோறும் அவருடைய பிறந்த நாளான செப்டம்பர் 5 ஆம் நாள் ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்நாளில் மத்திய, மாநில அரசுகள் சிறந்த ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து நல்லாசிரியர் விருதுகள் வழங்கிச் சிறப்பித்து வருகின்றன. 1997 முதல் அவ்விருது டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது என்று அவருடைய பெயரிலேயே வழங்கப்படுகிறது.

அகில உலகம் போற்றும் இந்நல்லாசிரியருக்கு மத்திய அரசு நம் நாட்டின் உயரிய விருதான பாரத ரத்னா விருது வழங்கிப் பெருமைப்படுத்தியுள்ளது. இவர் 1975 - ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் பதினேழாம் நாள் இயற்கை எய்தினார். மாமேதையாம் அவர் மறைந்தாலும் அவர்தம் புகழ் என்றும் மறையாது.

© TNTB NOT TO BE REPUBLISHED

***படித்தறிக :***

- ❖ டாக்டர், இராதாகிருஷ்ணன் குடியரசுத் தலைவராகப் பதவி வகித்தாலும் தாம் ஓர் ஆசிரியர் என்பதிலேயே பெருமை கொண்டவர்.
- ❖ அவருடைய பிறந்த நாளை ஆசிரியர் தினமாகக் கொண்டாடுகிறோம்.
- ❖ டாக்டர். இராதாகிருஷ்ணன் சென்னை மாநிலக் கல்லூரியில் பேராசிரியராகத் தம் பணியைத் தொடங்கினார்.
- ❖ உலகப்பல்கலைக் கழகங்கள் இவருக்குப் பதினேழுமுறை டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தன.
- ❖ மத்திய அரசு பாரத ரத்னா விருது வழங்கி பெருமைப்படுத்தியுள்ளது.

***பயிற்சி***

**I. *எதிர்ச்சொல் தருக :***

1. பெருமை x .................
2. எளிய x .................
3. நல்ல x .................
4. திறந்து x .................
5. புகழ் x .................

**II. *கோடிட்ட இடங்களை நிரப்புக :***

1. உலகப் பல்கலைக் கழகங்கள் இவருக்குப் ............ முறை டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தன.
2. இரண்டுமுறை இந்தியக் குடியரசுத் ............ பொறுப்பேற்றார்.
3. அவருடைய பிறந்தநாள் ............... தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.
4. மத்திய அரசு ............... விருது வழங்கிப் பெருமைப்படுத்தியுள்ளது.
5. இவர் மைசூர்ப்பல்கலைக் கழகத்தில் ............. பேராசிரியரானார்.

NOT TO BE REPUBLISHED @KTBS

**III. ஒன்று அல்லது இரண்டு வரிகளில் விடை தருக :**

1. டாக்டர் இராதாகிருஷ்ணன் எங்கு, எப்போது பிறந்தார்?

விடை ..........................................................................

..........................................................................

2. டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களின் பெற்றோர் யாவர் ?

விடை ..........................................................................

..........................................................................

3. டாக்டர் இராதாகிருஷ்ணன் தொடக்கக் கல்வியையும் உயர்கல்வியையும் எங்கு பயின்றார் ?

விடை ..........................................................................

..........................................................................

4. டாக்டர் இராதாகிருஷ்ணன் எப்போது குடியரசுத் தலைவர் ஆனார் ?

விடை ..........................................................................

..........................................................................

5. டாக்டர் இராதாகிருஷ்ணன் மாணவர்களிடம் காட்டிய அன்பை விளக்குக.

விடை ..........................................................................

..........................................................................

6. டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களின் ஆங்கில மொழி ஆற்றலைப் பற்றி எழுதுக.

விடை ..........................................................................

..........................................................................

NOT TO BE REPUBLISHED @KTBS

## IV. கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களைப் படித்துச் சரியான சொல்லை நிரப்புக :

(சமையல் அறை : மருத்துவமனை ; பள்ளிக்கூடம் ; பேருந்து நிலையம் ; மைதானம்)

1. குழந்தைகள் படிக்கும் இடம் ................
2. பேருந்துகள் நிற்கும் இடம் ................
3. மாலையில் குழந்தைகள் விளையாடும் இடம் ..........
4. உணவு தயாரிக்கும் இடம் ................
5. நோயாளிகள் சிகிச்சை பெறும் இடம் ................

## V. கையெழுத்துப் பிரதிகளைப் படிக்கவும்.

கிழக்கும் மேற்கும்

நாம் ஒவ்வொரு நாளும் காலை
முதல் மாலை வரையில் சூரியனைப்
பார்க்கிறோம். அது வானத்தில் நகர்ந்து
செல்வது போல் நம் கண்ணுக்குத் தோன்று-
கிறது. பூமி அசைவது நமக்கு
தெரிவதில்லை. பூமி சுழல்வதையும் நாம்
உணர்ந்து கொள்ள முடிவதில்லை.
சூரியன் கிழக்கில் உதித்து மேல் ஏறிச்
சென்று உச்சியை அடைகின்றது. மாலையில்
மேற்கே சாய்ந்து மறைகின்றது என்பதை
நாம் நாள்தோறும் இக் காட்சியைக்
காண்கிறோம்.

சூரியன் கிழக்கிலிருந்து மேற்கே
செல்கிறது என்று நம்முடைய கண்கள்
சொல்கின்றன. ஆனால் அது உண்மையல்ல
உண்மையில் பூமிதான் சுழல்கின்றது.
என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

## சிந்தித்து பார்:

### வானொலி இயங்குவது எப்படி?

நாம் பேசும் பேச்சு, இசை போன்றவற்றை மின்காந்த அலைகளாக மாற்றி அவற்றை வான்வெளியில் செலுத்தும் பணியை வானொலி நிலையம் மேற்கொள்கிறது. அப்படி வான்வெளியில் செலுத்தப்படும் மின்காந்த அலைகள் ஒரு குறிப்பிட்ட அதிர்வெண் உடையதாக இருக்கும்.

வானொலிப் பெட்டியில் உள்ள டயலை இந்தக் குறிப்பிட்ட அதிர்வெண்ணில் வைத்தால் வானில் வரும் அந்த குறிப்பிட்ட மின்காந்த அலைகளைப் பெற்று அவற்றை மீண்டும் ஒலி அலைகளாக மாற்றித் தருகிறது வானொலிப் பெட்டி.

(கடல் வாழும் உயிரனங்களை வட்டமிடு.)

NOT TO BE REPUBLISHED @KTBS

## VI. நாளேடுகளைப் படிக்கவும்.

# செம்மொழியான தமிழ் மொழி

**'தமிழுயர தானுயர்வான் தமிழன்'**

'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த மொழி'. இது ஏதோ நம் தாய் மொழி என்று பெருமைக்காக சொல்வதல்ல. நிரூபிக்கப்பட்ட உண்மை. இந்த உலகில் எத்தனை மொழிகள் தோன்றி நாளடைவில் அழிந்திருக்கின்றன. ஆனால் பல மாற்றங்களுக்கு பிறகும் தமிழ்த்தாயின் பாகங்களில் காயம் பட்டதே தவிர சிதைவுறவில்லை. அதன் இனிமை, இலக்கணம், மரபு மாறவில்லை.

மூத்தகுடி பேசிய நம் தமிழ் மொழி சங்க காலத்தில் சங்கம் வைத்து வளர்க்கப்பட்டது. அதனால்தான் அந்த காலம் சங்க காலம் எனப் பெயர் பெற்றது. 'வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும் வன்மொழி' என்றார் பாரதி. தமிழ் மொழிக்கு உள்ள சிறப்பே அதன் தனித்து இயங்கும் பண்புதான். இதைத்தான் புரட்சி கவிஞர் பாரதிதாசன் 'தனித்தியங்கும் தன்மை தமிழனுக்கு உண்டு, தமிழே ஞானத்தின் தமிழ் பண்பு' என்றார்.

தமிழ் மொழி மூத்த மொழிகளுக்கு எல்லாம் முதன்மொழி என்ற உண்மையை மொழி நூலார் ஆராய்ந்து நிறுவியுள்ளனர். திராவிட மொழிகள் மிகப் பழமையானவை. அவை 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வழக்கில் இருந்து வந்துள்ளன. இந்தோ-ஆரிய மொழியான சமஸ்கிருதம் இங்கு நுழைவதற்கு முன்னரே திராவிட மொழிகள் வழக்கில் இருந்தன என்று மொழியியல் அறிஞர் டாக்டர் ச.அகத்தியலிங்கம் கூறுகிறார்.

தமிழ்நாட்டில் உள்ள பள்ளி, கல்லூரிகளில் தமிழ்தான் பயிற்று மொழியாக இருக்க வேண்டும். பிற மொழிகளில் படிப்படை விட தாய் மொழியில் பயில்வது சிறப்பானது. எளிமையானது. கற்றுக் கொடுப்பவர்களுக்கும் எளிமையாக இருக்கும். இன்றும் வளர்ந்த நாடுகளில் தொடக்க கல்வி முதல் உயர் கல்வி வரை அவரவர் தாய் மொழியிலேயே படிக்கிறார்கள். ஆங்கில மொழியின் ஆதிக்கத்தால், நாம் நமது தாய் மொழிகளின் தன்மையை இழந்து விட்டோம் என்று காந்தியடிகள் கூட வருத்தப்பட்டு உள்ளார்.

ஒரு படைப்பாளியின் சிந்தனைகளும், கற்பனை எண்ணங்களும் தாய் மொழியில் தான் உருவாகி வளரும். தமிழுக்கு அமுதென்று பேர் அந்த தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்பது ஒவ்வொரு தமிழனின் நெஞ்சிலும் நீங்காத எண்ணமாக இருக்க வேண்டும். யுகங்கள் பல கடந்து செம்மொழியான தமிழ் மொழி வாழும்.

\- முகமது நவுபால், 10-ம் வகுப்பு.

© KTBS NOT TO BE REPUBLISHED

# பூமி எப்போது தோன்றியது?



ஏறத்தாழ சுமார் 500 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் பூமி தோன்றி இருக்கலாம் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். ஆனால், பூமி தோன்றிய பின் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகே உயிரினங்கள் தோன்றியிருக்க வேண்டும் என்பது அவர்களின் கருத்து.

முதலில் ஒருவகையான தாவர இனம்தான் பூமியில் தோன்றியது. தண்ணீரில் தோன்றிய ஒருவகைப் பாசிதான் அந்தத் தாவரம். இந்த நீர்ப்பாசி தான் உயிர்த் தோற்றங்களின் அடிப்படையாக இருந்திருக்கக் கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். சுமார் 100 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் தான் இதுபோன்ற நீர்ப்பாசி தோன்றியதாகவும் அவர்கள் கணக்கிட்டுள்ளனர். அந்தக் காலத்தில் கார்பன் கூட்டுப்பொருட்கள் அதிகமாக இருந்ததே நீர்ப்பாசியின் தோற்றத்திற்கு காரணம். நீர்ப்பாசி தோன்றி கிட்டத்தட்ட 50 கோடி ஆண்டுகளுக்குப் பின்னர் தான் அடுத்தகட்ட உயிர்த் தோற்றங்களைக் காண முடிந்தது.

தொடக்கத்தில் தோன்றிய உயிரினங்கள், இப்போதுள்ள உயிரினங்களைப் போல பூமியில் நடமாடி உயிர் வாழ்வில்லை. அந்த உயிரினங்கள் கிளிஞ்சல் போன்ற கெட்டியான கூடுகளில் அசைவற்று முடங்கிக் கிடந்தன. அவற்றின் வளர்ச்சியில் அல்லது வாழ்க்கையில் மாற்றங்கள் உண்டாவதற்கு மேலும் 50 கோடி ஆண்டுகள் ஆகியிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

50 கோடி ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்று கருதப்படும் பாறைகளை ஆராய்ந்தபோது, அந்தக் காலத்தில் வாழ்ந்த உயிரினங்களின் அடையாளங்கள் அவற்றில் இருந்தன. அந்தப் பாறைப் படிவங்களை ஆராய்ச்சியாளர்கள் 'பாசில்' (Fossil) என்று அழைக்கின்றனர். பல கோடி ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்று கருதப்படும் பாறைகளைக் கொண்டுதான் அக்கால உயிரினங்களின் தன்மை, உருவம் போன்றவற்றை அறிஞர்கள் கணக்கிடுகின்றனர்.

# 'தாய்மொழி இருக்கிறதே!'



கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் ஒருமுறை மதுரைக்கு வந்திருந்தார்.

தமிழ்க் கவிஞர்கள் இருவர் தாகூரைச் சந்திப்பதற்காக அவர் தங்கியிருந்த இடத்துக்குச் சென்றனர்.

தாகூருக்குத் தமிழ் மொழி தெரியாது. எனவே அவர் விளங்கிக்கொள்வதற்கு வசதியாக இருக்கும் என்று தாகூரைப் பாராட்டி ஆங்கிலத்தில் எழுதிய கவிதைகளை எடுத்துச் சென்றிருந்தனர்.

தங்களை தமிழ்க் கவிஞர்கள் என்று அறிமுகப்படுத்திக்கொண்ட அவர்கள், ஆங்கில மொழிக் கவிதையைப் படித்துக் கொடுத்தனர்.

அந்தக் கவிதைத் தாளை கையில் வாங்கிக்கொண்ட தாகூர், ''உங்களைத் தமிழ்க் கவிஞர்கள் என்று அறிமுகப்படுத்திக்கொண்டீர்கள். ஆனால் தமிழ்க் கவிதையால் என்னைப் பாராட்டாமல், ஆங்கில மொழிக் கவிதையால் என்னைப் பாராட்டியிருக்கிறீர்களே! உங்கள் சொந்தக் குரலால் பேசுவது போலவே சொந்த மொழியால் என்னைப் பாராட்டியிருந்தால் மகிழ்ச்சி அடைந்திருப்பேன். நாம் கிளிப்பிள்ளைகளைப் போல ஆங்கில மொழியைக் கற்றுக்கொண்டிருக்கிறோம். ஆனால் நமக்கென தாய்மொழி என்று ஒன்று இருக்கிறது. அந்த மொழியால்தான் ஒருவரையொருவர் புகழ வேண்டும்'' என்று சொன்னார்.

அதைக் கேட்டுத் தமிழ்க் கவிஞர்கள் வெட்கமடைந்தனர்.

நன்றி - தினத்தந்தி

NOT TO BE REPUBLISHED

# 24. திருக்குறள்

## விருந்தோம்பல்

1. செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல் விருந்து வானத்தவர்க்கு.

2. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

செய்ந் நன்றி அறிதல்.

3. செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது.

4. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

கல்வி

5. கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையார் கல்லா தவர்.

6. கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை

- திருவள்ளுவர்.

*அருஞ்சொற் பொருள் :*

1. ஓம்பி = போற்றி : வருவிருந்து = வரும் விருந்தினர், வானத்தவர்க்கு = வானுலகிலுள்ள தேவர்களுக்கு.
2. மோப்ப = முகர்ந்து பார்த்தல் ; குழையும் = வாடும்
நோக்க = பார்க்க.
3. வையகம் = மண்ணுலகம்
வானகம் = வானுலகம்.
4. நன்றி = நன்மை ;
5. கற்றோர் = கற்றவர் ; முகத்திரண்டு = முகத்தில் இரண்டு
6. விழுச்செல்வம் = அழிவற்றசெல்வம் ; மாடல்ல = செல்வம் அல்ல

S5K4H9

© KTBS NOT TO BE REPUBLISHED

**கருத்துரை :**

1. வந்த விருந்தினரைப் போற்றி இனி வரும் விருந்தினரை எதிர்ப்பார்த்திருப்பவன், வானுலகத்தில் உள்ள தேவர்க்கும் நல்ல விருந்தினன் ஆவான்.

2. அனிச்சப்பூ முகர்ந்தவுடன் வாடி விடும். அதுபோல், முகமலர்ச்சியின்றி வேறுபட்டு நோக்கினால், விருந்தினர் முகம் வாடும் .

3. தான் ஓர் உதவியும் முன் செய்யாதிருக்க, பிறர் தனக்குச் செய்த உதவிக்கு மண்ணுலகையும் விண்ணுலகையும் கை மாறாகக் கொடுத்தாலும் ஈடு ஆகாது.

4. ஒருவர் முன் செய்த நன்மையை மறப்பது நல்லதல்ல. அவர் செய்த தீமையை அப்பொழுதே மறந்து விடுவது நல்லது.

5. கல்வி கற்றவர்களுக்கு கண் கண்ணாகக் கருதப்படும் மற்றவர்களுக்கு அது புண்ணாகக் கருதப்படும்.

6. ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும். கல்வி தவிர மற்றப் பொருள்கள் எல்லாம் (அத்தகைய சிறப்புடைய) செல்வம் அல்ல.

## I. விடையளிக்கவும் :

1. தேவர்களுக்கு நல்ல விருந்தினனாக அமைவர் யார் ?
2. விருந்தினர் எப்பொழுது வாடிவிடுவர் ?
3. மண்ணுலகையும் விண்ணுலகையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் எதற்கு ஈடு ஆக முடியாது ?
4. எதை மறந்து விடுவது சிறந்தது ஆகும் ?
5. முகத்தில் இரண்டு புண் உடையவர் யாவர் ?
6. ஒருவனுக்கு அழிவில்லாத செல்வம் எது ?

NOT TO BE REPUBLISHED ©KTBS

## நந்தலாலா



காக்கைச் சிறகினிலே நந்தலாலா ! - நின்றன்
கரிய நிறந் தோன்று தையே நந்தலாலா !
பார்க்கும் மரங்க ளெல்லாம் நந்தலாலா ! - நின்றன்
பச்சை நிறந் தோன்று தையே, நந்தலாலா !
கேட்கு மொலியி லெல்லாம் நந்தலாலா ! - நின்றன்
கீத மிசைக்கு தடா, நந்தலாலா !
தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா - நின்னைத்
தீண்டு மின்பந் தோன்றுதடா, நந்தலாலா !

- மகாகவி பாரதியார்

@KTBS
NOT TO BE REPUBLISHED

# திறன்களும் பாட எண்களும்

| திறன் பகுதி | திறன்கள் | பாட எண் |
| --- | --- | --- |
| 1. கேட்டல் | 1. அறிமுகமான சூழலில் எளிய சொற்பொழிவுகளைக் கேட்பதுடன் புரிந்துக் கொள்வது. | 13, 21 |
| | 2. அறிமுகமில்லாத சூழலில் சொற்பொழிவுகளையும் உரையாடல்களையும் புரிந்துக் கொள்ளுதல். | 10, 14, 18 |
| | 3. அறிமுகமில்லாத சூழலில் செயல்பாடுகள், இவற்றில் ஈடுபட்ட குறிப்புகளையும் சைகைகளையும் புரிந்துக் கொள்வது. | |
| | 4. கொடுக்கப்பட்ட பாடப் பகுதியின் மையக் கருத்துக்களை அறிந்துக் கொள்வது | |
| பேசுதல் | 1. தொடர்ச்சியாகப் பேசுதல். | 18, 22, |
| | 2. தெளிவாக மனப்பாடம் செய்து ஒப்புவித்தல். | 1, 2, |
| | 3. அறிமுகமில்லாத பொருட்களை புரிந்துக் கொள்ளுதல் | 6, 20 |
| | 4. வகுப்பறையில் நடைபெறும் எளிய வாதம் மற்றும் விவாதம் போன்றவற்றில் பங்கு பெறுதல். | 16, 23 |
| | 5. பேச்சு மொழி மற்றும் இலக்கிய மொழிகளின் இடையேயான வேறுபாட்டைக் கற்றல். | 4, 15, 19 |

© KTBS NOT TO BE REPUBLISHED

| | | |
|---|---|---|
| படித்தல் | 1. வியப்பூட்டும் படக்கதைகள் மற்றும் பத்திரிக்கைகளைப் படித்தல்.<br>2. கையெழுத்துப் பிரதிகள் மற்றும் மற்றவர்களின் கையெழுத்தைப் படித்தல்.<br>3. சிறுவர் இலக்கியங்களைப் படித்தல்.<br>4. ஏறக்குறைய 4000 சொற்களைப் படித்துப் புரிந்துக் கொள்ளுதல்<br>5. பாடத்தில் உள்ள செய்தித் தொகுப்பு மற்றும் நிகழ்வுகளின் காரண காரியங்களைப் புரிந்துக் கொள்ளுதல்.<br>6. பாடப் பகுதியைப் படித்தபின் எப்படி ? ஏன் ? எதற்கு ? போன்ற வினாக்களுக்கு விடையளித்தல். | 6, 7<br><br>4, 11, 17<br><br>7, 8, 16<br><br>3, 9<br><br>6, 12, 20 |
| எழுதுதல் | 1. அழகாகவும் தெளிவாகவும் எழுதுதல்.<br>2. கேட்டு எழுதுதல் மூலம் பயன் பாட்டிலிருக்கும் எழுத்துக் குறியீடுகளைப் பயன் படுத்தி எழுதுதல்.<br>3. குறிப்புகளைப் பின்பற்றி எழுத்துக் குறியீடுகளைக் கொண்ட பத்திரிக்கைகளை எழுதுதல்.<br>4. எளிய படைப்பாற்றல் விதிகளைப் புரிந்து கொண்டு சொற்றொடர்களை உருவாக்குதல் | 5, 1<br><br>14A<br><br>5, 16<br><br>3, 5, 18 |

@KTBS NOT TO BE REPUBLISHED